# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2029 மார்கழி 22 புதன்கிழமை (06-01-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 35


# பேச்சுக்கள் மூலம் தீர்வு காணுமாறு கேட்கின்றார் அஸ்கிரிய பீடாதிபதி!

## யாரேனும் மத்தியஸ்தம் வகிக்கலாம் என்கிறார்

கொழும்பு, ஜனவரி 6

"யுத்தம் முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு முடிவு காண்பதற்காக யாரேனும் மத்தியஸ்தம் வகிப்பதோடு பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கும் முன்முயற்சி எடுக்கப்படவும் வேண்டும்."

இவ்வாறு வலியுறுத்தியிருக்கின்றார் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் பலிப்பானே ஶ்ரீ சந்தானந்த தேரர்.

**நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் மகாநாயக்கரைச் சந்திக்க அஸ்கிரிய விகாரைக்குச் சென்றபோதே அவரிடம் மகாநாயக்கர் இவ்வாறு கூறினார்.**

அமைச்சர் பீரிஸிடம் மகாநாயக்கர் மேலும் கூறியதாவது:-

தொடர்ந்து செல்லும் யுத்தம் நாட்டுக்கு பெரும் தலையிடியாக உள்ளது. இதனால் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் வீணாக உயிரிழக்கின்றனர்.

யுத்தம் விரைவில் முடிவடையும்எனத் தெரியவில்லை. பிரச்சினைக்குத் தீர்வுகாண யாரேனும் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும்.

அதனூடே பேச்சு நடத்தி யுத்தத்திற்கு முடிவுகாண

(9 ஆம் பச்கம் பார்க்க)

## கிழக்கிலும் வன்னியிலும் மழையால் பெருவெள்ளம்

யாழ்ப்பாணம், ஜன. 6

கிழக்கு மாகாணத்திலும் வன்னியிலும் தொடரும் கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அந்தந்தப் பகுதிச் செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக அங்குள்ள 12 பிரதேச செயலர் பிரிவுகளில் எட்டுப் பிரதேச செயலர் பிரிவுகளில் மட்டும் 9 ஆயிரத்து 324 குடும்பங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

பொதுமண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் தொடரும் மழையால் ஆயிரத்து 100 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இங்கினியாகல குளத்தின் நீர்மட்டம் 90 அடி உயர்ந்துள்ளது. இன்னும் 20 அடி நீர் மட்டம் உயர்ந்தால் குளம் நிரம்பி வழியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு - கொழும்பு பாதையில் மன்னம்பிட்டியில் வீதிக்கு மேலால் 6 அடி உயரத்துக்கு நீர் பாய்வதால் மட்டக்களப்பில் இருந்து வெளியிடங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உன்னிச்சைக் குளம், ருகம் குளம், நவகிரிக்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் வெளிநாடுகள் பலவும் பங்குபற்ற வேண்டும்!

### டக்ளஸ் தேவானந்தா கருத்து

கொழும்பு, ஜன. 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா உட்பட ஒன்றுக்கு மேற்பட்ட வெளிநாடுகள் சம்பந்தப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் லிபரல் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் ஹியூஜயை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈ. பி. டி. பியின் பேச்சாளர் கே. தவராஜா, ஆலோசகர் கலாநிதி விக்கினேஸ்வரன் ஆகியோரும் இச்சந்திப்பின் போது உடனிருந்தனர்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை பயணிகளுக்கு பயண ஏற்பாடு இல்லை

கொழும்பு, ஜன. 6

வடக்குக்கான நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 'லங்கா முடித்த' கப்பல் அடுத்த சில தினங்களில் காங்கேசன்துறை நோக்கிப் புறப்படவிருக்கிறது என்று வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து நேரடியாக இக்கப்பல் காங்கேசன்துறை செல்லும் என்றும்—

திருகோணமலையில் தங்கியுள்ள மக்களை இக்கப்பலில் ஏற்றிச் செல்ல முடியாத நிலையே உள்ளது என்றும் —

அவர் மேலும் சொன்னார்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## யுவதிகளின் விடுதிகளை இரவில் சோதனையிடாதீர்

### புளொட் வற்புறுத்துகிறது

கொழும்பு, ஜன. 6

கொழும்பில் தமிழ்ப் பெண்கள் தங்கியிருக்கும் விடுதிகளை இரவு நேரங்களில் சோதனை செய்வதை தவிர்க்க வேண்டும் என்று புளொட் அமைப்பின் உப- தலைவர் என். மாணிக்கதாசன் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இப்படிக்கேட்டுள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பு வெள்ளவத்தையில் 129 தமிழ் யுவதிகள் தங்கியிருக்கும் விடுதியொன்றிற்குள் கடந்த 31 ஆம் திகதி

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநர் இராஜினாமா!

கொழும்பு, ஜன. 6

எதிர்வரும் 29 ஆம் திகதி வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறவிருக்கையில் அதன் ஆளுநர் ஹெக்டர் அரங்காவெல தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தமது இராஜினாமாக் கடிதத்தை நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த அவர் தமது இராஜினாமக்கான காரணம் எதையும் அதில் காட்டவில்லை.

(உ–10)

## பிரிட்டிஷ் எம். பியை வன்னி செல்லக் கோரிக்கை

கொழும்பு. ஜன. 6

''லண்டனிலும் கொழும்பிலும் இருந்து பேசுவதில் பயனில்லை வன்னிக்கு நேரில் சென்று மக்கள் படும் அவலங்களை நேரில் பாருங்கள்''.

கொழும்பு வந்திருக்கும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் ஹியூஜ ஸிடம் இவ்வாறு தெரிவித்தார் புளொட் நாடாளுமன்ற உறுப்பினரான த. சித்தார்த்தன்.

நேற்று முன்தினம் அவரை சித்தார்த்தன் சந்தித்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாகத் தமது கருத்துக்களை சித்தார்த்தன் அவருக்குவிளக்கினார்.

இராணுவக் கட்டுப்பாடில்லாத வன்னிப் பிரதேசத்துக்குச் சென்று உண்மை நிலையைக் கண்டறியும்படி சித்தார்த்தன் அவரைக் கேட்டுக் கொண்டார்.

அங்கு செல்ல அனுமதி கிடைக்காவிட்டால் — ஆகக் குறைந்தது வவுனியாவுக்காவது சென்று— அங்குள்ள நிலைமையை நேரில் கண்டறியுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

(உ)

## ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சை: விடைத்தாள்கள் திருத்தும் பணி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 6

ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைவிடைத்தாள்களைத் திருத்தும் பணி இன்று வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகுகின்றது.

திருத்துவதற்கான விடைத்தாள்கள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் கப்பல் மூலம் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளையினால் எடுத்து வரப்பட்டன.

விடைத்தாள்கள் திருத்தும் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ள

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானியக் குழு இன்று வருகை

கொழும்பு, ஜன. 6

ஜப்பானிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட தூதுக்குழு ஒன்று நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இலங்கை வரவிருக்கிறது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜன. 6

மாங்குளம் முன்னணிநிலைகள் மீது கடந்த 3 ஆம் திகதி காலை 6. 50 மணியளவில் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். இரு படையினர் காயமடைந்தனர் என்று பலாலி இராணுவத் தலைமையக செய்திக் குறிப்பு தெரிவித்தது.

படையினர் மோட்டார் தாக்குதலை நடத்தி விடுதலைப் புலிகளின் தாக்குதலை முறியடித்தனர் என்றும்அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ–3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

சகல வர்த்தகர்களுக்குமான

### அன்பான வேண்டுகோள்

1999 ஆம் ஆண்டு தை மாதம் 6, 7, 8, 11, 12, 13, 18, 20, 21, 22 ஆகிய திகதிகளில் முற்பகல் 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரை கச்சேரி நிறுவைகள், அளவைகள் திணைக்களத்தில் நிறுவைகள், அளவைகள் நிறுக்கும் கருவிகள் பரிசோதித்து முத்திரையிடப்படுமெனவும் சகல வர்த்தகர்களும் தங்களின் தராசுகளுக்கு முத்திரையிடும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

-- யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இல. 27, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம். (சி/6023)



## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்.

A/L 2001

இணைந்த கணிதம்: A. பத்மநாதன்
பௌதிகவியல்: T. சம்பந்தன்
இரசாயனவியல்: S. மகேஸ்வரன்

ஆரம்பம்:- 07 - 01 - 99
( வியாழன் 3-00 மணி )

(61961)


## பொது அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களினதும் (சந்தைகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகள் அனைத்திற்கும் பின்வரும் திகதிகளில் யாழ்ப்பாணம் செயலகத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 14.00 மணி வரை பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படும் என மேலதிக அரசாங்க அதிபர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இச் சந்தர்ப்பத்தை சகல வர்த்தக நிலையங்களும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

06-01-1999 07-01-1999
08-01-1999 11-01-1999
12-01-1999 13-01-1999
18-01-1999 20-01-1999
21-01-1999 22-01-1999

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
05-01-1999

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
(சி/6022)

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் (வ-து)
சுன்னாகம்.

மகளிர்களுக்கான அடிப்படை

## மனையியற்பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல் – 1999

மேற்படி பயிற்சி நெறிக்கு சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் மகளிர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி பெற விரும்புவோர், சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று, பூர்த்தி செய்து, **25–01–99** க்கு முன்னர் விண்ணப்பங்களை 'பொதுமுகாமையாளர், பல நோ. கூ. சங்கம், சுன்னாகம்' என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
04.01.99 (சி/6021)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஸ்தாபகரின் மகனும்
முன்னாள் ஆசிரியருமாகிய

### அத்தியார் அருணாசலம் பாலசுப்பிரமணியம்

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி.
(61960)

யாழ்ப்பாணம் வண் —வடகிழக்கு அருள்மிகு கொண்டலடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகி ஒன்பது தினங்கள் நடைபெறும்.

29 ஆம் திகதி மாலை 5 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (உ 6)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தில் இன்று மாலை 5-30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனையுடன் பூரத்திருவிழா நடைபெறும். (உ-30)


## BOSCO

25, நக்கா வீதி.

Spoken English
by: BRITTO
ஆரம்பம்: 09 - 01 - 99
3-00 மணி.

கலை, வர்த்தகம்

2001

ஆரம்பம்:- 08 - 01 - 99
மாலை 3 மணி

Common General
திரு. செல்வம் (B. A.)
(61963)



## A/L98 DAY CLASS

கணக்கீடு
திரு பாலவாசன்
ஆரம்பம்: 07 - 01 - 99
வியாழன் 8.10 A.M
குறிப்பு: ★ வாரத்தில் 8 மணித்தியால வகுப்புகள்

### விக்னா கல்வி நிறுவனம்

(61948)



## ராஜா

யாழ்ப்பாணம்.
நெப்போலியன், நாசர்
தேவயானி, மணிவண்ணன்
நடித்த
கிழக்கும் மேற்கும்
முதல் வாரம்
10-30, 2-00, 5-00
[சி/5958]



## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
இன்று முதல்
ரஜனியின்
நல்லவனுக்கு நல்லவன்
தினசரி;- 10.30, 2.30
(பழைய நேரம்)
T. P. No. 070—212223
(61826)



## நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்.
அஜித், தேவயானி
நடித்த
காதல்கோட்டை
காட்சிகள்: 10-30, 2-30
(61956)


# கால், வாய் நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். குடாவில் கால் நடைகளுக்கு ஏற்பட்டுள்ள கால், வாய் நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு கால் நடை வைத்திய அதிகாரி பிரிவிலும் கால் நடை வைத்தியர்கள் கால், வாய் நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசியினைப் போட்டு வருகிறார்கள்.

தடுப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்த பின்னர் கால், வாய் நோய் குறைந்து வருவதாக மேற்படி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-ரி)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 6

சாவகச்சேரி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## அத்தியார் பாலசுப்பிரமணியம்

நீர்வேலியைச் சேர்ந்த அமரர் அத்தியார் (ஸ்தாபகர் அத்தியார் இந்துக்கல்லூரி) அவர்களின் ஏகபுத்திரன் அ. பாலசுப்பிரமணியம் 4 - 1 - 1999 இல் காலமாகி விட்டார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், பா. மனோகரன், இலங்கைநாதன் புஸ்பராணி (லண்டன்), பா. சிவசங்கரன், காலஞ்சென்ற செல்வி பா. தங்கராணி (ஆசிரியை), பா. அருணாசலமுதலியார் (ஜேர்மனி), பா. காசிநாதமுதலியார் (இந்தியா), செல்வி பா. இராசராசேஸ்வரி (ஆசிரியை ஆவரங்கால் மகாஜன) ஆகியோரின் தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-1-1999) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (61945)

## கந்தசாமி சுந்தரலிங்கம்

வியாபாரி மூலைச் சந்தியைச் சேர்ந்த கந்தசாமி சுந்தரலிங்கம் 02 - 01 - 99 இல் கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
த. ரவீந்திரராசா
(பேறாமகன்)

முதலாம் கட்டை,
வியாபாரி மூலைச்சந்தி,
பருத்தித்துறை. (சி-6015)

## கந்தையா நாகலிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகலிங்கம் 5-1-99 நேற்றுக் காலமானார்.

அன்னார் கனகசபாபதி, குழந்தைவேலு, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜேஸ்வரி, யோகநாதன், குகானந்தன், சோமரத்தினம், பரமேஸ்வரி, லோகேஸ்வரி, சிவனேஸ்வரி, அருள்ரூபன், ஜெயரூபன், சிவரூபன், முகுந்தன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் தவமணி, சிறிகாந்தன், பேபி, மிஸ்ஸி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-1-99) புதன்கிழமை 2.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ, மகேஸ்வரன்

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி. (61962)

## திருமதி இராசலிங்கம் நாகரத்தினம்

கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி இராசலிங்கம் நாகரத்தினம் 05- 01- 99 நேற்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்பு மனைவியும் சுந்தரலிங்கம் (கொக்குவில்), காசிலிங்கம் (உரும்பிராய்), சண்முகலிங்கம் (இருபாலை), சுப்பிரமணியம் (மணியம் - கண்டி), கமலேஸ்வரி (ஏழாலை), பூமணி (ஜேர்மனி), கமலாசினி, காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், ஜெகலிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜகுமாரி (ஜெந்தி), உதயகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற உதயசிறி, ராஜ்குமார் (ராஜன்–அலங்கார் ஆடையகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 6-1-99 நண்பகல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ராஜ்குமார்
(மகன்)

V.H, லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (61965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவைத் செல்கிறார்

லண்டன். ஜன. 6

தென் ஆபிரிக்காவில் தங்கியிருக்கும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் எதிர்வரும் சனிக்கிழமை குவைத் செல்கிறார்.

குவைத்தில் மன்னர் அல் ஷபாவைச் சந்திப்பதுடன், குவைத்தில் தளம் அமைத்துள்ள பிரிட்டிஷ் படைகளையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஐ.நா. அதிகாரிகளைதிருப்பி அழைக்க கோபிஅனான் நடவடிக்கை

## அங்கோலாவில் புதிதாக நெருக்கடி

றுவாண்டா, ஜன. 6

அங்கோலாவில் 10 நாள் இடைவெளிக்குள் ஐ.நா.வின் இரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து அங்கோலாவில் உள்ள ஐ.நா. அதிகாரிகளைத் திருப்பி அழைப்பதற்கு ஐ. நா. பொதுச்செயலாளர் கோபி அனான் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் அவசரமாகக் கூடி அங்கோலா நிலைமை குறித்து விசாரித்தது.

இந்தக் கூட்டத்தின் போது உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மிகவும் ஆத்திரத்துடன் கருத்துக்களை வெளியிட்டனர்.

அங்கோலாவின் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றும் ஐ. நா. அதிகாரிகள் அனைவரையும் தலைநகர் றுவாண்டாவுக்கு வருமாறு அங்கோலாவுக்கான ஐ.நா. தூதுவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐ. நா. அதிகாரிகள் ஆயிரம் பேர் வரை அங்கோலாவில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐ.நா. விமானச் சிதைவுகளை கண்டுபிடிக்கும் முகமாக யுனிட்டா கிளர்ச்சிக்காரர்களும் அங்கோலா அரசும் ஐ.நா.விற்கு உதவ வேண்டும் எனவும் ஐ. நா. கோரி உள்ளது.

போர்த்துக்கலின் குடியேற்ற நாடாக இருந்த அங்கோலா 1975 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.

சுதந்திரத்துக்குப் பின்னர் அங்கோலாவில் பதவிக்கு வந்த மார்க்கிய ஆதரவு அரசுக்கு ஆதரவாகி அங்கோலாவுக்கு கியூபா படைகளை அனுப்பியது.

பின்னர் ஐ. நா. வின் சமாதானத்திட்டத்தை அங்கோலா அரசும் கிளர்ச்சி இயக்கமான யுனிட்டாவுக்கு ஏற்றுக் கொண்ட போதிலும் ஒப்பந்தத்தில் இருந்து யுனிட்டா பின்வாங்கிக் கொண்டது.

ஐ.நா விமானங்கள் யுனிட்டா கிளர்ச்சியாளர்களினால் சுடப்பட்டதை ஐ. நா. பொதுச் செயலாளர் பாரதூரமான விடயமாகக் கருதுகிறார்.

(இ-க)

# ஜனவரி 1 இல் பிறந்த குழந்தைகளுக்கு பிரான்ஸில் 100 யூறோ நாணயம் பரிசு

பாரிஸ், ஜன. 6

யூறோ நாணயம் அமுலுக்கு வந்த தினமான ஜனவரி முதலாம் திகதி பிரான்ஸில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் 100 யூறோக்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்தப்பணம் குழந்தையின் பெயரில் சேமிப்புக் கணக்கு ஒன்றில் ஆரம்ப முதலீடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யூறோ நாணயங்கள் 2002 ஆம் ஆண்டு ஜனவரி வரை பொதுமக்களின் புழக்கத்துக்கு விநியோகிக்கப்படமாட்டாது. ஆனால் யூறோ நாணயத்தில் வங்கிக் கணக்குகள் மற்றும் வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ள முடியும்.

யூறோ நாணயம் ஐரோப்பாவை புதிய வல்லரசாக மாற்றும் என்று நிதி நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ-10)

# கிளின்ரனுக்கு எதிராக மற்றொரு சாட்சியம்

வாஷிங்ரன். ஜன. 6

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் மீதான குற்றப் பிரேரணை விசாரணைகளில் மற்றொரு பெண் சாட்சியம் அளிக்கஇருப்பதாக அமெரிக்க காங்கிரஸ் குடியரசுக்கட்சி உறுப்பினர் லின்சே கிரஹாம் தெரிவித்தார்.

மொனிக்கா லுவின்ஸ்கியுடன் வெள்ளை மாளிகையில் இந்த பெயர் குறிப்பிட விரும்பாத பெண்ணும் கடமை ஆற்றினார் என்றும் —

அவர் தற்பொழுது தாம் முன்னர் அளித்த சாட்சியத்தை வாபஸ் பெற்றுவிட்டு புதிய தகவல்களை வெளியிட விரும்புவதாகவும் லின்சே கிரஹாம் தெரிவித்தார்.

## உலக அரங்கில்

# வெளிநாட்டவர்கள் குடியேறுவதைக் கட்டுப்படுத்த சிங்கப்பூர் முடிவு

பாங்கொங், ஜன. 6

சிங்கப்பூரில் வெளிநாட்டவர்கள் அதிகளவில் குடியேறி வசித்து வருவதால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதும் சிங்கப்பூர் அரசு தனது குடியேற்ற விதியை மாற்றியமைக்கவுள்ளது.

இதற்கான புதியசட்டம் இம்மாதம் முதல் அமுலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டவரின் குடியேற்ற உரிமம் அவர்களின் கல்வித்தகுதி, வயது, மாதச்சம்பளம் ஆகியவற்றைப் பரிசீலிதது மிகவும் அவசியம் எனக் கருதப்பட்டால் மட்டுமே குடியேற்றச் சான்றிதழ் வழங்கப்படும்

சிங்கப்பூரில் நடக்கும் வர்த்தகக் கண்காட்சிகளில் பங்குபற்றும் தொழிலதிபர்களுக்கு மிகக் குறைந்த நாள்களுக்கு விசா வழங்கப்படவுள்ளதுடன் அங்கு செய்தி சேகரிக்கச் செல்லும் பத்திரிகையாளர்களுக்கு தனியே சிறப்பு விசாவும் வழங்கப்படும். (இ-8-10)

# இந்தோனேஷியாவில் ராணுவம் துப்பாக்கிச் சூடு

## 9 பொதுமக்கள் பலி

ஜகார்த்தா, ஜன. 6

இந்தோனேஷியாவில் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 9 பேர் கொல்லப்பட்டனர். 23 பேர் படுகாயமடைந்தனர். 123 பேர் வரை பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தோனேஷியாவின் அச்த் மாகாணத்தில் கிளர்ச்சிக்காரர்கள் அரச கட்டடங்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களின் போது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பாப்பரசர் போலந்து விஜயம்

வத்திக்கான், ஜன. 6

இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி தனது சொந்த நாடான போலந்துக்குச் செல்ல உள்ளார் என வத்திக்கான் தெரிவித்துள்ளது.

78 வயதான திருத்தந்தை போலந்து நாடாளுமன்றத்தில் தமது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உரையை முதன் முறையாக ஆற்றவுள்ளார். (இ-க)

# ஆள் இல்லா விண்கலம் செவ்வாய் புறப்பாடு

## ஒருவருட காலம் பயணம்

வாஷிங்ரன், ஜன. 6

அமெரிக்காவின் செவ்வாய்க்கிரகத்துக்கான ஆள் இல்லாத 'போர்லா லான்டர்' ஆய்வுக்கலம் புளோரிடாவின் விண்வெளிமையத்திலிருந்து செவ்வாய்க்கிரகத்தை நோக்கிச் செலுத்தப்பட்டுள்ளது.

'டெல்ரா—2' என்ற ராக்கெட்டை எடுத்துச்சென்றுள்ள இந்த ஆய்வுக்கலம் திட்டமிட்டபடி வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டதாக நாஸா அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தின் தென்பகுதியை ஆய்வு செய்யும் இக்கலம் அங்கே இருக்கக்கூடிய உயிர் மற்றும் நீர் குறித்து தகவல்களையும், படங்களையும் பூமிக்கு அனுப்பி வைக்கும்.

எதிர் வரும் டிசெம்பர் 3 ஆம் திகதி லான்டர் செவ்வாயை அடையும் என்று எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ8)

# போலந்திடம் கோரிக்கை

மொஸ்கோ, ஜன. 6

ரஷ்யப் பிரதமர் யெல்ட்சினின் முன்னாள் உதவியாளர் செர்க்கிரோன்ஸியை ஒப்படைக்குமாறு போலந்திடம் ரஷ்யா கேட்டுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் தலைவரான செர்க்கிரோன்ஸி மீது இலஞ்சக் குற்றச் சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ரஷ்ய நிதித் துறை அதிகாரிகள் இவர் மீது சர்வதேச கைது உத்தரவையு பிறப்பித்துள்ளனர்.

மெசர்க்கிரோன்ஸி தற்போது போலந்து நாட்டில் அரசியல் தஞ்சம் கோரி வாழ்ந்து வருகிறார் என்பது தெரிந்ததே. (இ-க)

# பாதுகாப்பு அமைச்சுக்குத் தவறான தகவல்களை வழங்கி வந்தாராம்!

## அட்மிரல் பகவத் மீது குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜன. 6

இந்தியாவில் பதவி நீக்கம் செய்யப்பட்ட கடற்படைத் தலைமைத் தளபதி அட்மிரல் விஷ்ணு பகவத் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு அமைச்சுக்கு உண்மைகளை மறைத்து தவறான தகவல்களைத் தெரிவித்து வந்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் பகவத் தமது வரம்பை மீறி செயற்பட்டு மத்திய அரசுக்கு தர்மசங்கடமான சூழ்நிலையை உருவாக்கி வந்தார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த வருடம் பாகிஸ்தான் விமானம் ஒன்று இந்திய கடற்படைக் கப்பல் மீது தாழ்வாகப் பறந்தது. ஆனால் பாகிஸ்தானின் இந்த அத்துமீறல் குறித்து பாதுகாப்பு அமைச்சிற்கு கடற்படைத் தலைமையகம் தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை.

பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தாமலேயே இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு கடற்படைப் புலனாய்வுத்துறை நேரடியாகக் கண்டனக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது.

கடற்படைப் புலனாய்வுத் துறை அனுப்பிய கடிதத்தை பாகிஸ்தான் தூதரகம் ஏற்றுக் கொள்ளவில்லை. இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்து எப்போதும் முறையான வழியில் தகவல் பரிமாற்றம் இருக்க வேண்டும் என்று பாகிஸ்தான் தூதரகம் பதில் அளித்திருந்தது.

இந்திய கடற்படைப் புலனாய்வுத் துறையினரிடம் இருந்து வந்த கடிதத்தை அதிகார பூர்வமானதாகத் தாம் கருதவில்லை எனப் பாகிஸ்தான் அதிகாரிகள், இந்திய வெளியுறவுத்துறைக்கு அனுப்பிய விளக்கக் கடிதம் ஒன்றில் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கடிதத்துக்குப் பிறகே பாதுகாப்புத்துறைக்கு இச்சம்பவம் பற்றி தெரிய வந்தது. இது மத்திய அரசுக்கு பல வழிகளிலும் தர்மசங்கடமான நிலைமையைத் தோற்றுவித்தது.

கடற்படைத் துணைத் தளபதிக்கு அடுத்த தரத்தில் உள்ளவர்கள் ஆயுத விற்பனையாளர்களுடன் முறையற்ற தொடர்பு வைத்திருப்பதாகவும் பிரதமர் அலுவலகத்துக்கு முறைப்பாடு வந்தது.

இந்தத் தகவல் பாதுகாப்பு அமைச்சகத்தை அதிர்ச்சி அடையச் செய்தது.

மேற்படி தகவலுக்கு ஆதாரம் ஏதாவது உள்ளதா என பிரதமர் அலுவலகம் கடற்படைத் தலைமையிடம் கேட்டபோது ஆதாரம் ஏதும் இல்லை என மொட்டையாக மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

கடற்படைத் தலைமையின் பதிலில் திருப்தி அடையாத பிரதமர் அலுவலகம் இது பற்றி மேலும் விசாரணை நடத்துமாறு பாதுகாப்புத் துறையைக் கேட்டுக் கொண்டது.

கடற்படைத் துணைத் தளபதிக்கு அடுத்த நிலையில் உள்ள ஓர் அதிகாரி, மொஸ்கோவில் உள்ள ஆயுத விற்பனையாளர்களுடன் 'பக்ஸ்' மூலம் தொடர்பு வைத்தது விசாரணையில் தெரிய வந்தது.

இந்தியாவின் முக்கிய புலனாய்வு அமைப்புக்களில் ஒன்றான 'றோ' செயற்படுவது குறித்தும் பகவத் விமர்சனம் செய்திருந்தார்.

'றோ' அமைப்பு உருப்படியான தகவல் எதனையும் தருவதில்லை என வெளிப்படையாகவே பகவத் குற்றஞ்சாட்டினார்.

பகவத் மீது இதுபோன்ற பல்வேறு முறைப்பாடுகள் கூறப்பட்டதை அமைச்சரவைக் கமிட்டியின் பாதுகாப்புப் பிரிவு ஆராய்ந்த பின்னரே அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

(இ-க-10)

# இஸ்ரேலின் முதலாவது பெண் விமானி

ஜெருசலேம், ஜன. 6

இஸ்ரேல நாட்டின் முதற் பெண் விமானப்படை விமானி என்ற பெருமையை சாரி என்பவர் பெற்றுள்ளார்.

''எப்—16'' என்ற போர் விமானத்தை ஓட்டும் இப் பெண் விமானியின் முழுப் பெயர் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை.

ஆபத்தான வேலையில் பெண்கள் ஈடுபடக்கூடாது என்று நாட்டில் எழுந்த கடும் எதிர்ப்பையும் மீறி தேர்வில் தேறிய சாரி தற்போது விமானப்படையில் பணிபுரிய இணைந்துள்ளார்.

(இ-8-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சரவணை சங்கரப்பிள்ளை என்பவருடைய அடையாள அட்டை (இல. 283620344V) 28-12-98 அன்று மருதனார் மடத்துக்கும், உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ. அட்டையில் உள்ள முகவரியில் அல்லது ச. சங்கரப்பிள்ளை, புதுவளவு, கோப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (61919)

மார்க்கண்டு தவராசா என்பவருடைய தேசிய, விசேட, அஞ்சல் அடையாள அட்டைகள் மூன்றும் யாழ். நகரப் பகுதியில் 01-01-99 அன்று தவறிவிட்டன. (இல. 5412189X) கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். தபாலகத்தில் ஒப்படைத்து உதவவும் (61926)

ஜி. டி. செல்வராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 232060611V) முக்கிய ஆவணங்களுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அசெம்பிளி ஒவ்கோட், கண்டி வீதி, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/ 6007)

நற்சிங்கம் இன்பமலர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 695843593V) கடந்த 15—12—98 அன்று கல்வியங்காடு சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எக்காளத் தொனி, 21, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (61927)

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் மாட்டெரு விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் 08-01-99 ஆம் திகதிக்கு முன் எருவைப் பார்வையிட்டு விலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/ 6006)

## தேவை

ஒரு சிறிய குடும்பம் ஒன்றுக்கு வசதியான வீடு ஒன்று வாடகைக்கு உடன் தேவை. சுண்டுக்குளி, கச்சேரி, நல்லூர்ப் பகுதியில் விரும்பத்தக்கது. தொடர்பு: திரு. முனீஸ் துரைசிங்கம், மே/பா திரு. ஐ சின்னப்பு தபாலதிபர், சுண்டுக்குளி (தொலைபேசி. இல. 25 50) (61937)

## ENGLISH, MATHS

ஆண்டு 6 - O/L வரை. முதலாம் தவணைப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடைய வாரத்தில் 5 மணித்தியாலங்கள் வரை கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, சிவன் மேற்கு வீதி, திருநெல்வேலி. (61906)

## நாடகம்

யாழ். சேவையில் வீடு நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடக நூல் யாழ்ப்பாணமா? கொழும்பா? எங்கள் வாழ்க்கையைச் சித்திரிக்கும் 7 நாடகங்களும், 4 கட்டுரைகளும் ரூபா 50. (61940)




இதழ்: 4
வெளிவந்துவிட்டது.
(சி/ 6019)

# பெயர் மாற்ற அறிவித்தல்

எனது மகள்
**சின்னப்பு வீரபத்திரநாயகி** (வயது - 10)
இன்று தொடக்கம் தனது பெயரை
**சின்னப்பு சிவநிசா**
என மாற்றியுள்ளார் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

**திருமதி சின்னப்பு சின்னத்தங்கம்** (தாய்)

பளவத்தை, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. (61949)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி ஜெயம் பரிமளம்

(கல்யாணி)
(பளை)

தாயின் மடியில் **23—02—1953** இறைவனடியில் **07—12—1998**

திதி: 06 — 01 — 1999

எமது நண்பர் **சி. நவஞானம்** அவர்களின் அன்பு மாமியார் திருமதி ஜெயம் பரிமளம் (கல்யாணி) அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ப. தெ. வ. அ. கூ. சங்க
**நண்பர்கள்.**

பளை. (61912)

# நெஞ்சகலா நினைவில் ஈராண்டு

மலர்வு 25 — 11 — 1949



உதிர்வு 29 — 12 — 1996

இணுவைத் திருவூர்

## அமரர் கணபதிப்பிள்ளை திருவிளங்கம்

(அலுவலர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

திதி: 6 - 1 - 1999

ஓயாத உங்கள் நினைவில்
ஈராண்டு போனதப்பா!
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தென்ன?
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தென்ன?
அப்பா என்றழைக்க தாங்களில்லையே
என் செய்வோம்!

**நகுலாதேவி திருவிளங்கம்,**
(அன்பு மனைவி)
**பிள்ளைகள், சகோதரர், மைத்துனர்கள், உறவினர்கள்.**

இணுவில் தெற்கு,
இணுவில். (61944)

# WANTED

## An Experienced Coach IN Western Music & Band Display

ATTRACTIVE REMUNERATION will be paid for the eligible Selectee.

Those who are interested may contact Principal at College Office on Week Days.

SECRETARY
**Past Pupils Association**

J/ UDUPPIDDY,
AMERICAN MISSION COLEGE,
Valvettiturai. (C/ 6016)

# விற்பனையாகின்றது

**1999 ஆம் ஆண்டு புதுவருட**
திருக்கணித பஞ்சாங்க மாத கலண்டர்
**விலை ரூபா — 50,00**
எல்லாக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்
(சி-6017)

# மணிவிழா வாழ்த்துக்கள்

"சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்;
ஏனெனில் கடவுளின் மக்கள் எனப்படுவர்."
+ மத். 5 : 9

பலாலி ஆசிரிய கலாசாலை
கத்தோலிக்க பீடத்தலைவரும்,
பிரதி அதிபருமான
**உயர்திரு.**

## துரை ஆரோக்கியதாசன்

**அவர்கள்**
(Mr, Francias St, Roche, B A, Dip, in Ed.)

இன்று தமது 60ஆவது அகவையை நிறைவு செய்கின்றார்.

மணிவிழாக்காணும் அவரை வாழ்த்துகிறோம்.

**கத்தோலிக்க மன்றம்,**
பலாலி ஆசிரியர் கலாசாலை,
திருநெல்வேலி.

(61943)

# முதலாம ஆண்டு நினைவலைகள்



## நல்லதம்பி வல்லிபுரம்

(B.Sc., M. Sc., Dip. in Ed., S.L. E. A. S II)

மலர்வு **01—06—1934** உதிர்வு **18—12—1997**

திதி: 06—01—1999

ஊருக்கு எமை அளித்து
உத்தமராய் வாழ வைத்து
பாரில் பலர் புகழ
பவித்திரமாய் வாழ்ந்து விட்டு
கண்ணில் நீர் வற்றி
நாமெல்லாம் கதறி அழ
விண்ணிற் கெதற்காக
விரைந்து சென்றீர்களப்பா?

காலமெல்லாம் உங்கள் நினைவில்
**மனைவி, மக்கள்.**

186/23, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (61951)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு வைபவம்

★★★★★★★★★

## திரு. ஆறுமுகம் ராஜேந்திரன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

இடம்: யா / அத்தியார் இந்துக் கல்லூரி

காலம்: 06 - 01 - 1999, புதன்கிழமை
பி.ப 2.30 மணி

கோப்பாய் கல்விக் கோட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்திப் பணிகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய

திரு. ஆறுமுகம் ராஜேந்திரன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

அவர்களின் கல்வி அபிவிருத்திப் பணி மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

கல்வி அபிவிருத்திச்சபை,
கோப்பாய்.

(61942)



# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



''சிவநெறிச் செம்மல்''

## சங்கரப்பிள்ளை நமசிவாயம்
(உரிமையாளர், அம்பிகா டிஸ்பென்சறி, சாவகச்சேரி.)

| தோற்றம் | சிவபதம் |
|---|---|
| 22—08—1937 | 06—01—1994 |

திதி: மார்கழி அபரபக்க தசமி
(12 — 01 — 1999)

எங்கள் அன்பிற்குரிய குடும்பத் தலைவரே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
தாங்கள் வாழ்ந்து காட்டிய வழியில்
நாங்கள் செல்வதுதான் உங்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு.
தங்கள் ஆத்மா என்றும் எங்கள் குலதெய்வமாகிய சரசாலை நுணுவிற் சிதம்பர விநாயகர் பாதாரவிந்தங்களில் நீடு வாழ்க.

குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (61901)


# வீதிக் குறியீடுகள்

யாழ்ப்பாணம், ஜன. 6

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கருத்திற் கொண்டு நெல்லியடிப் பொலீஸார் வீதி ஒழுங்குகளை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் பிரகாரம் முன் நடவடிக்கையாக நெல்லியடிப் பகுதியில் பிரதான வீதிகளில் பாதசாரிகளின் வீதிக் குறுக்கான நடைபாதைகளை குறித்து வர்ணக் குறியீடுகளிட்டு வருகின்றனர். (இ-15)

# சுயதொழில் வாய்ப்புக் கடன்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இரு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஐம்பது பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா விகிதம் சுய தொழில் வாய்ப்புக் கடன் வழங்கியுள்ளது.

அகதிகளுக்கான ஐ நா. தாதரகம் வழங்கிய இந்த நிதியை புலோலி வட கிழக்கு உத்திராவத்தை மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம், மந்திகை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன இப் பகுதியில் சுயதொழில் வாய்ப்புக் கடனாக கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ளது.

இந்த வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் என். மகேந்திரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி – அருள்ராஜன் புலோலி வட கிழக்கு கிராம சேவை அலுவலர் இ. புலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-109)

# பங்கீட்டு அட்டை மாற்றம் குறித்து அறிவிப்பு

வலி. வடக்கு, ஜண. 6

நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து தற்போது வேறுபிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்களும், முன்னைய கிராம அலுவலர் பிரிவில் இருந்து வேறுகிராம அலுவலா பிரிவுகளில் வசிப்பவர்களும் ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் தாங்கள் வசிக்கும் பகுதிகளுக்கு நிவாரணப் பங்கீட்டு அட்டைகளை மாற்றிக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தினத்தின் பின்னர் பங்கீட்டு அட்டைகள் மாற்றம் செய்யப்படமாட்டாது எனவும், உரிய கிராம அலுவலர் பிரிவுகளில் இல்லாதவர்களுக்கு நிவாரணபங்கீட்டுஅட்டைகள் விநியோகம் செய்யப்படமாட்டாது எனவும் பிரதேச செயலரினால் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கல்விப் பணிப்பாளர் நினைவாக புலமைப்பரிசு

காலஞ்சென்ற கல்விப் பணிப்பாளர் அமரர் சு. இரத்தினராசா ஞாபகார்த்தமாக யாழ். பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பரிசு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் பயிலும் காலத்தில் தமிழ் இலக்கியத்துறையில், கவிதை—சிறுகதை இலக்கியங்களில் சிறந்து விளங்கி இறுதி ஆண்டை முடித்துச் செல்லும் ஒருவருக்கு இந்த ஞாபகார்த்தப் பரிசு வருடா வருடம் வழங்கப்படவுள்ளது.

அமரர் சு. இரத்தினராசாவின் கல்விப்பணியை மையமாகக் கொண்டு இளைப்பாறிய அதிபரும், எழுத்தாளரும், சமூக சேவையாளருமான லயன் அ. பொ. செல்லையா அவர்கள் 'கல்விப்பணிப்பாளர் இரத்தினராசா ஒரு கலங்கரை விளக்கு' என்ற நூலை வெளியிட்டு இந்த நினைவுப் பரிசினை ஏற்பாடு செய்துள்ளார்.

நினைவுப் பரிசுக்கான ரூபா ஐம்பதாயிரத்தை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையிடம் அ.பொ.செல்லையா அண்மையில் கையளித்தார். (இ)

# வருடாந்தக் கூட்டம்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு சங்கக்காரியாலயத்தில் இடம் பெறவுள்ளது. (இ-8)


# A/L 2001 மாணவர்களே!!

கூட்டமாக ஒடித்திரிந்து; உங்கள் வாழ்வைப் பாழாக்காது நிதானமாகச் செயற்படுங்கள்!
''அமைதியான நல்லூர்ச் சூழலில்; போக்குவரத்துச் சிக்கலற்ற இடத்தில்!''

## கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பமாகின்றன.

ஒவ்வொரு துறையிலும் சிறப்புப்பட்டம் பெற்ற ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் உங்களுக்கேற்ற நேர அட்டவணையில் ஒரு பாடத்தையும் தெரிவு செய்ய முடியும்.

கலை - வர்த்தக ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| இந்து நாகரிகம்/ சமயம் | கணக்கீடு |
| கலாநிதி காரை | திரு. பாலவாசன் |
| தமிழ் | வணிகக் கல்வி |
| திரு. தமிழிந்திரன் | திரு. முகுந்தன் |
| புவியியல் | பொருளியல் |
| திரு. S. R. பாலா | திரு. திருலோகநாதன் |
| அளவையியல் | நுண்ணறிவு |
| திரு. K. S. கருணா | திரு. பாலச்சந்திரன் |


## சயன்ஸ் அக்கடமி
நல்லூர்

99 O/L DAY CLASS பொறுந்திருங்கள்.

(61939)



# ஆறாண்டிலும் ஆறுமோ எம் நெஞ்சம் ....



## கந்தையா பிறேமதாசன்
(பிறேமன்)

| உதிப்பு | அழிப்பு |
|---|---|
| 09 — 06 — 1974 | 06 — 01 — 1993 |

ஆண்டுகள் ஆறாகிவிட்டன
உனை இழந்து ஆறாத வடுவாக
எம் நெஞ்சங்களில் உன் நினைவு
ஆற்றுதலோ தேற்றுதலோ இன்றித்
தவிக்கின்றோம் உன் இழப்பால்.
ஆயுளுக்கும் எமக்கு ஆறுதல் இனி ஏது?

—குடும்பத்தினர்

| அன்று | இன்று |
|---|---|
| பெற்றோல் நிலைய ஒழுங்கை, காங்கேசன்துறை. | 2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. |

(61888)



# எழுதுவினைஞர் ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சை

இதற்குரிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் பிரிவு I 11-01-99 காலை 9 மணி
பிரிவு II சனி, ஞாயிறு - 09 - 01 - 99 மாலை 3 மணி

ஆசிரியர்
திரு. அ. குமாரவேல்

## புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(61915)



# 1st. in Com., G. A. Q யாழ்., பேராதனை வெளிவாரி

இக்கற்கை நெறிக்கு G. C. E. (A/L) கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடநெறிகளில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள்.

இக்கற்கை நெறிக்கான விரிவுரைகள்: 9 - 1 - 1999 காலை 8-00 மணிக்கு.

விவரங்களுக்கு:
திருமதி எஸ். அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(61917)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி ஜெயம் பரிமளம்
(கல்யாணி)

தோற்றம்: 23-02-53  
மறைவு: 07-12-98

அம்மா! உங்களைப் பிரிந்து முப்பத்தியொரு நாள்கள் ஓடிமறைந்து விட்டன. ஆனாலும் எங்கள் மனதில் முப்பத்தியொரு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் முகத்தையும், எங்களில் உட் கொண்ட அரவணைப்பையும் என்றும் மறக்கமுடியாது அம்மா! ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன தங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா அம்மா? ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தென்ன அரவணைக்க ஆயிரம் உள்ளம் இருந்தென்ன, அம்மா என்றழைக்கத் தாங்களில்லையே. என்ன செய்வோம்? என்றென்றும் எங்கள் நெஞ்சைவிட்டகலாது உங்கள் நினைவலைகள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,  
கணவன், தாய்,  
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்  
மருமக்கள், பெறாமக்கள்  
சகோதரர்கள்.

கண்டி வீதி,  
பளை

(61913)

## முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன

தென்மராட்டி. ஜன. 6

யாழ். செயலகத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட இரண்டு முச்சக்கர வண்டிகள் ஊனமுற்ற இருவருக்கு கடந்த வாரம் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகர், கல்வயல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இருவருக்கு இந்த முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

(இ-117)

## விஞ்ஞான சங்க கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பகுதி 'டி' யின் கருத்தரங்குத் தொடர் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் பேராசிரியர் கா. குகபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது அபிவிருத்தி ஆய்வுகள், துறைகளுக்கு இடையிலான அணுகுமுறையின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் கலாநிதி ஏ வி. மணிவாசகர் கருத்துரை வழங்குவார்.

(இ-8)

SUBRA  
கல்வி நிறுவனம்  
நீதிமன்ற வீதி,  
மல்லாகம்.  
SPOKEN ENGLISH  
by: BRITTO  
ஆரம்பம் 06-01-99  
2 மணி  
(61911)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் 1999ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1999ஆம் ஆண்டுக்கான ஆதனவரி நடப்பாண்டு (1998ஆம் ஆண்டு) நடைமுறையில் இருந்த அறவீட்டு விகிதமே மாற்றமின்றி நடைமுறையிலிருக்கும்.

1999 ஆம் ஆண்டுக்கான

1ஆம் காலாண்டு வரி, மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும்,  
2ஆம் காலாண்டு வரி, ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும்,  
3ஆம் காலாண்டு வரி, செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும்,  
4ஆம் காலாண்டு வரி, டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும்  
செலுத்தப்படல் வேண்டும்.

### விசேட கழிவு

1) 1999 ஆம் ஆண்டின் 4 காலாண்டுகளுக்குமான தொகையை 31-01-1999-க்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு 10சதவீத கழிவு வழங்கப்படும்.
2) 1999 ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமான தொகையை. காலாண்டின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துபவர்களுக்கு 5 சதவீத கழிவு வழங்கப்படும்.

### தண்டம்

குறிப்பிட்ட காலாண்டுக்கான வரியை அக்காலாண்டு முடிவடைவதற்கு முன் செலுத்தப்படாதவிடத்து,

1) வெற்றுக் காணிகளுக்கும், குடியிருப்பு ஆதனங்களுக்கும் 15 சதவீத தண்டமும்,
2) வியாபார நோக்கத்திற்கான ஆதனங்களுக்கு 20 சதவீத தண்டமும் அறவிடப்படும்.

### வரி விலக்கும் ஆட்சேபனையும்

சேதமடைந்துள்ள காலியாகவுள்ள ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டும் விதிக்கப்பட்ட ஆதனவரிக்கெதிரான ஆட்சேபனையின் பொருட்டுமான எழுத்துமூல விண்ணப்பங்கள் **31-01-1999**-க்கு முன்னர் எனக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1998ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்தவாறே வியாபார மலகூடக் கட்டண விகிதங்கள் 1999ஆம் ஆண்டிலும் நடைமுறையில் இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றேன்.


வரியிறுப்பாளர்களாகிய உங்களுக்கு முக்கியமாக சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகளை யாவது ஒழுங்காக செய்து தருவதற்கு இவ்வரி நிலுவைகளைச் செலுத்தி எமக்கு பூரண ஆதரவு தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சு. சந்திரசேகரம்  
தலைவருக்காக  
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,  
வல்வெட்டித்துறை. 28-12-1998. (சி-6011)

## விண்ணக வாழ்வின் நினைவஞ்சலி

8 ஆம் ஆண்டு   முதலாம் ஆண்டு





### இளையவர் கோபால்
மண்ணில் 1926—07—14  
விண்ணில் 1990—04—18

### கோபால் சிவமணி
மண்ணில் 1928—07—18  
விண்ணில் 1997—12—19

திதி: பஞ்சமி 1999—01—06

ஓராண்டு சென்றதுவோ உங்கள் நினைவு மறக்கவில்லை  
கூடி இருந்தோம் கூட்டைக் கலைத்துச் சென்றீர்கள்  
தேடி அலைகின்றோம் உங்கள் திருமுகத்தைப் பார்ப்பதற்கு  
அன்பான தங்கையே! அவன் கழல் பாதம் சேர்ந்தீரோ?

தங்கள் பிரிவால் துயருறும்  
அண்ணன், மச்சாள், அக்கா, மருமக்கள், பெறாமக்கள்,  
பேரப்பிள்ளைகள்: டிஜாசினி, டிலூஜன், சிவடிலூஜினி.

தகவல்:  
தம்பு கந்தசாமி,  
சிவஸ்கந்தபுரி,  
அச்சுவேலி.

(61918)

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்

மலர்வு 22 — 12 — 1981



உதிர்வு 24 — 11 — 1998

செல்வி
### தர்ஷிகா செல்வரத்தினம்
(யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவி)

கண் போலக் காத்திருந்தோம்  
காணாமற் போய் விட்டாய்  
கவிப் பொருளாய்ப் போற்றி நின்றோம்  
கண்ணீரின் பொருளானாய்  
அப்பாவின் இலட்சியத்தை  
அடைவிக்கப் பார்த்திருந்தோம்  
அப்பாவின் மடிதேடி  
அவசரமாய்ப் போய் விட்டாய்  
இப்போது நாம் இங்கே  
ஏக்கத்தில் வாடுகின்றோம்

நாளை (07-01-99) எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அம்மா, அக்காமார்,  
தம்பி, தங்கை.

ஷோபிதாஸ் ஸ்ரோர்ஸ்,  
ஆவரங்கால்.

(61907)

Digitized by Noolaham Foundation.  
noolaham.org | aavanaham.org

# உதயன்

## துணிவு வர...

இந்த நாட்டில் இடம் பெற்றுள்ள இனப்படு கொலைகளுக்கு சகல அரசியல் கட்சிகளினதும் இனவாதப் போக்கே காரணம். கடந்த ஐம்பதுவருட காலமாக ஆட்சிக்கு வந்த எல்லா அரசியற்கட்சிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இனவாதத்தையே ஆயுதமாகப் பயன்படுத்தின. —

இனவாதக் கருத்துக்களையும், இனவாத நோக்கங்களையும் கொண்டு செயற்படுவோரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும் —

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருப்பவர் ஒரு பௌத்த குரு என்றால் பலருக்கு வியப்பு ஏற்படும். ஏனெனில், தமிழர்கள் தங்களுக்குரிய நீதியான, நியாயமான உரிமைகளைக் கேட்பதனையும் ''இனவாதம்' என்று பெயர் சூட்டுபவர்களே, பௌத்த தேரர்களில் பலர்.

ஆயினும் மேற்படி கருத்துக்களை வெளியிட்ட வண.ஹெட்டிமுல்ல ராகுல தேரர் —

வடக்கு — கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதனையும் அம்பாறை, புத்தளம் மாவட்டங்கள் முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டங்கள் என்பதனையும் பௌத்தர்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் — எனவும் தெரிவித்திருக்கிறார்.

இந்த நாட்டில் இனவாதம் விஸ்வரூபம் எடுக்கவும் அதன் விளைவாக இன்று இரத்த ஆறு ஓடவும் தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் பௌத்த குருமார்கள் என்பது மறைக்க முடியாத சமகால வரலாறு.

தமிழர்களின் அரசியல் உரிமைகளை வழங்கப் போவதாகக் கூறும் ஜனாதிபதி சந்திரிகாவே, தென்னாபிரிக்கா சென்றவேளை, தமிழர்கள் வந்தேறு குடிகள் என்று கூறுமளவுக்கு, சிங்கள மக்களுக்கு வரலாற்றைத் திரித்து ஊட்டியதில், ஊட்டுவதில் பெரும் பங்கு வகித்தவர்கள், வகிப்பவர்கள் மகாசங்கத்தினர்.

எனினும் ஆயிரத்தில் ஒருவராக வண. ஹெட்டிமுல்ல ராகுல தேரர் போன்றவர்களும் இல்லாமல் இல்லை. இத்தகையோரின் கருத்துக்களை ஒன்று திரட்டிச் சிங்கள மக்களுக்குத் தெரிவிப்பது என்பது ஒரு பெரும் பணியாகும்.

ஆனால், தமிழர் பிரச்சினைக்கு நீதியான, நிரந்தரமான தீர்வு காண வேண்டும் என்பதில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கு உண்மையான, மனப்பூர்வமான விருப்பம் இருந்தால்—

வண. ராகுல தேரர் போன்றோர் கூறுவதை ஜீரணிப்பது கட்டாயம். அந்தக் கருத்துக்களை தென்னிலங்கை மக்களிடையே முன்னெடுத்துப் பரப்பக் கூடிய அரசியல் துணிச்சலும் தேவை.

அரசியல் லாபம் கருதி, ஆட்சி அதிகாரத்தைப் பெறும் சொந்த லாபம் கருதி, இனப்பிரச்சினையையும், இனவாதததையும் முதலாக்கும் போக்கை தெற்குத் தலைவர்கள் என்றுகைவிடுகிறார்களோ, அதன் பின்னரே, உண்மையைச் சொல்லும், செய்யும் துணிவு அவர்களுக்கு வரும்!

# பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு குறைந்த வட்டியில் அதிகாரசபைகடன்

யாழ்ப்பாணம், ஜன 6

யாழ். மாவட்டத்தில் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவி வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

யாழ். வணிகர் கழகத்துக்கு எழுதிய கடிதம் ஒன்றிலேயே மேற்படி அதிகார சபை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இடப்பெயர்வுக்காலத்தில் நகர எல்லைக்குள் பாதிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களின் பாதிப்பு விவரங்களை பொலீஸ் அறிக்கையுடன் வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைக்கு யாழ். வணிகர் கழகம் அண்மையில் அனுப்பிவைத்தது.

இந்த விவரங்களைப் பெற்றுக்கொண்ட பின்னரே யாழ். வணிகர் கழகத்துக்கு அனுப்பி வைத்த பதில் கடிதத்தில் கடனுதவி பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, மானிப்பாய், அச்சுவேலி, பருத்தித்துறை பகுதிகளிலிருந்து 110 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மட்டும் தமது பாதிப்புத் தொடர்பான விவரங்களை பொலீஸ் அறிக்கையுடன் புனர்வாழ்வு அதிகார சபைக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

ஏனைய வர்த்தகர்களையும் தமது பாதிப்பு தொடர்பான விவரங்களை யாழ். மாவட்ட வர்த்தக சம்மேளனத்திற்குச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-5)

## மரக்கன்றுகள் வழங்கப்பட்டன

சுன்னாகம். ஜன. 6

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 800 மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மா, பலா, தோடை, எலுமிச்சை, தென்னை, கமுகு, ஒட்டுத்தேசி, கொய்யா போன்ற பயனுள்ள மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஆயிரம் மரக் கன்றுகளும், பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் 2 ஆயிரத்து 800 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

## சுயதொழில் ஊக்குவிப்பு; ஐ. நா. தூதரகம் உதவி

தென்மராட்சி, ஜன. 6

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கைதடி நுணாவில், தாவளை, இயற்றாலை ஆகிய மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக சுயதொழில் ஊக்குவிப்புக்கடனாக நூறு பயனாளிகளுக்கு ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கைதடி நுணாவில் பகுதியில் சிறுவியாபாரம், தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல், பாய் தயாரித்தல், கிடுகு பின்னுதல் போன்றவற்றுக்காக 50 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் —

தாவளை இயற்றாலைப் பகுதியில் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 50பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ. பரராசசேகரம் தெரிவித்தார். (இ-117)

## ரயில்வே கடவை ஊழியர் 400 பேர் கொடுப்பனவு எதுவும் இன்றிப் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6

பாதுகாப்பற்ற ரயில்வே கடவைகளுக்கு பாதுகாவலராக 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் நியமிக்கப்பட்ட சுமார் 400 தொழிலாளர்களுக்கு 1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

இவ்வாறு சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து விடுமுறை எதுவும் எடுக்காது வேலை பார்த்ததுடன் சம்பளமாக ஆயிரம் ரூபாவைப் பெற்று வந்தனர்.

தற்போது வேறு எந்த வேலைக்கும் விண்ணப்பிக்கத் தகுதியுடைய வயதெல்லையைத் தாண்டியுள்ளதால் எதுவித வருமானமுமின்றி இவர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-8)

## மீண்டும் ஆரம்பம்

நெடுந்தீவு, ஜன. 6

இடப்பெயர்வு காரணமாக இயங்காதிருந்து வந்த தனிநாயகம் அடிகள் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

சுயதொழில் முயற்சிகளுக்கான கடனுதவிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்—

ஏற்கனவே கடனுதவி பெற்றவர்கள் அவற்றைச் செலுத்திய பின்னரே கடனுதவி பெறமுடியும் எனவும் — சங்கத்தின் தலைவர் வே. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

(இ-111)

## பங்கீட்டு அட்டைக்கு சீனி அளவு குறித்து முறையீடு

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். செயலகத்தினால் குடும்ப பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்ட 4 கிலோ சீனிக்குப் பதிலாக சில பல நோ. கூ. சங்கக் கிளைகள் 3 கிலோ சீனி வழங்கியதாக யாழ். செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடும்ப பங்கீட்டு அட்டைகளுக்கு 4 கிலோ சீனி வழங்கப்பட வேண்டும் என்னும் நிபந்தனையுடனே யாழ். செயலகம் பலநோ. கூ. சங்கங்களுக்கு இந்தச் சீனியை விநியோகம் செய்தபோதும் சில சங்கங்கள் இதனைக் கடைப்பிடிக்காமல் தாம் விரும்பிய அளவிலே சீனியை விநியோகித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிலோ 30 ரூபா வீதம் விநியோகிக்குமாறு வழங்கப்பட்ட இச்சீனியின் அளவு குறைக்கப்பட்டாலோ, அல்லது விலைகளில் அதிகரிப்புச் செய்யப்பட்டாலோ யாழ். செயலகத்திற்கு உடனடியாகத் தகவலை அனுப்பி வைக்குமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர். (இ-5)

## ச.ச. நிலையம் புனரமைப்பு

நீர்வேலி, ஜன. 6

ஈவினை சனசமூக நிலையப் புனரமைப்பு வேலைகளுக்காக பிரதேச சபையின் விசேட மூலதன நிதி மூலம் 98 ஆயிரத்து 476 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வலி. தெற்குப் பிரதேச செயலரின் உதவியால் இந்த நிலையம் புனரமைக்கப்பட்டு மக்களுக்குச் சேவையாற்றவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-110)

### தேர்தலில் பக்கச்சார்பு

## பொலீஸ் அதிகாரிகள் மீது விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜன. 6

வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கு உதவும் வகையில் பொலீஸ் பிரிவு (சி.ஐ.டி) மற்றும் தேசிய புலனாய்வுப் பணியகம் (என்.ஐ.பி.) ஆகியவற்றைச் சேர்ந்த உயர் பொலீஸ் அதிகாரிகள் சிலர் ஐ. தே. கவுக்கு ஆதரவளித்து பக்கச் சார்பாக நடந்து வருவதாக ஜனாதிபதிக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனை அடுத்து அந்தப் பொலீஸ் அதிகாரிகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்குவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக பொலீஸ் மா அதிபர் தலைமையில் ஐந்து பேர் கொண்ட உயர் அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சிரேஷ்ட உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் கேசரிக்குத் தெரிவித்தார்.

(ஐ-10)

## வெளிவாரிப் பரீட்சைகள் பெப்ரவரி நடுப்பகுதியில்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் 97/98 கல்வியாண்டு மாணவர்களுக்காக நடத்தப்படும் வெளிவாரிப்பரீட்சைகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பொதுக்கலைமாணி மற்றும் வணிகமாணி பட்டங்களுக்கான பகுதிஒன்று பரீட்சைகளும், சிறப்புக்கலைமாணிப்பட்டத்துக்குரிய பகுதி ஒன்று பரீட்சைகளும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் வணிகமாணி மற்றும் சிறப்புக்கலைமாணிப் பட்ட மாணவர்களுக்கான பகுதி மூன்றுப் பரீட்சைகள் ஆரம்பமாகித்தொடர்ந்து இடம்பெறவுள்ளதாகவும்—

தற்போது வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இரு பரீட்சை நிலையங்களில் நடைபெற்றுவரும் பொதுக் கலைமாணி இறுதிப் பரீட்சைக்கு 248 மாணவர்களும், வணிகமாணிப்பகுதி இரண்டு பரீட்சைக்கு 49 மாணவர்களும் தோற்றுகின்றனர் எனவும் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-7)

### நாளை

மார்கழி 23

வியாழக்கிழமை

திதி: பஞ்சமி காலை 7.00 வரை

நட்சத்திரம்: பூரம் பிற்பகல் 3. 10 வரை.

சுபநேரம்: 8.02 - 9.32

ராகுகாலம்: 2.02-3 32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

முயற்சியும், தன்னம்பிக்கையும் நிறைந்தவர்களுக்கு நேரம் இரு கைகளையும் தூக்குகின்றது.

## தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அறநிதியவிழா

யாழ்ப்பாணம், ஜன. 6

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 74 ஆவது பிறந்தநாள் அறநிதிய விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிறந்தநாள் அறக்கொடையை யாழ்.மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி இராஜேந்திரப் பிரசாத் ஏற்றுக்கொள்வார்.

இந்நிகழ்வில் ஆசிரியர் ஆறு. திருமுருகனின் வரவேற்புரையும், சிவஸ்ரீ இ. சுந்தரரேஸ்வரக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரின் ஆசியுரையும் இடம்பெறும்.

வாழ்த்துரைகளை உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன், தெல்லிப்பழைக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் ஆகியோர் நிகழ்த்துவர்,

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ-8)

## இலவச கல்விச் சேவை

மூளாய், ஜன. 6

பண்ணாகம் அம்பாள் கலை மன்றம் மாணவர்களுக்கான இலவச கல்விச் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

புதிய கல்வி ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்து மேற்படி இலவச கல்விச் சேவையை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை அம்பாள் கலை மன்றம் சேகரித்து வருகிறது. (இ-99)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

### ஓர் அரச அதிகாரியின் விருப்பம்

யுத்தத்தின் மத்தியிலே வாழும் மக்களுக்குச் சேவை செய்வதே அரச ஊழியர்களின் கடமை. இன்று கொழும்பும் யாழ்ப்பாணமும் தொடர்பற்ற நிலையில் இருக்கும் வேளையில் போதிய அதிகாரங்களைப் பெற்று யுத்தத்தினால் நலிந்திருக்கும் மக்களுக்குச் சேவை செய்வதே பொருத்தமானது எனும் நோக்கிலேயே செயற்பட்டு வருகின்றோம்.

எத்தனை சிரமத்தின் மத்தியில் எமது கடமைகளை நாம் ஆற்றுகிறோம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். பொருளையோ, புசழையோ எதிர்பார்க்கும் நிலையில் இன்று நாம் இல்லை. அரசாங்க சேவையைச் சேர்ந்தவர் என்ற வகையில் மக்களுக்குப் பணி செய்வது எங்கள் தலையாய கடமை. பாராட்டுக்களை எதிர்பார்த்து மக்கள் பணி செய்ய நினைப்பது ஒவ்வாதது என்றே நான் கருதுகிறேன்.

ஆகையால் இன்றைய காலகட்டத்தைக் கருத்திற்கொண்டு இவற்றையெல்லாம் தவிர்த்து எமது சேவை சிறப்பாய் அமைய உதவும்படியும் என்னை வாழ்த்துவதற்கும் பதிலீடாக, நொந்து போயுள்ள, மக்களுக்கும்நற்கரரியங்களுக்கும் உதவும்படியும்அந்தண சிரேஷ்டர்களையும், பதிவாளர்களையும் பெரியோர்களையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ந. சதாசிவஐயர்**
காணிப்பதிவாளரும், மேலதிக
மாவட்டப் பதிவாளரும்,

யாழ்ப்பாணம்.

### சேதமுற்ற நிலையிலுள்ள மதகு

பருத்தித்துறைக் கடற்கரை வீதியில்இறங்குதுறைக்கும், புனித தோம்மயார் ஆலயத்துக்கும் இடையே காணப்படுகின்ற பாரிய வாய்க்காலோடு கூடிய மதகு பெருமளவில் சேதமடைந்துள்ளது. இதிலே பாரிய குழி ஒன்றும் காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்பவர்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. வழமையாக இந்த வீதியைப் பாவிப்பவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் மதகின் சேதத்தில் விழுந்து ஆபத்துக்களை எதிர்நோக்கக் கூடிய நிலையும் உள்ளது.

இவ்வீதியால் கனரக வாகனங்கள் அதிகளவில் பயணிக்கின்றன. இதனால் வீதியில் சேதங்கள் மேலும் ஏற்படுவதுடன், விபத்துக்கள் அதிகரிப்பதற்கும் அதிகளவு வாய்ப்புண்டு. மேலும் இதுவரை இவ்விடத்தில் எச்சரிக்கை அறிவிப்புக் கூட வைக்கப்படாதது வேதனைக்குரிய விடயம்.

தேவையற்ற விதத்தில் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்கும், மதகு மேலும் சேதமடைவதை நிறுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த, துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவ வேண்டும்.

**எஸ். மேரி ஸ்வெல்த்**

பருத்தித்துறை.

### வீதிகள் திருத்தப்படுமா?

கடந்த சில நாள்களாகத் தொடரும் பெரு மழையினால் கரவெட்டி இராஜகிராம வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் இப்பகுதிகளிலுள்ள வீதிகளினால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்பகுதி வீதிகள் கடந்த பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் இவை போக்குவரத்துச்செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.

மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இப்பகுதி வீதிகள் விரைவில் திருத்தப்படவேண்டுமென இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். இவர்களின் நலன் பேணப்படுமா?

**ந. சாந்தி.**

கரவெட்டி.

### காடழிப்பு நிறுத்தப்படவேண்டும்

வடமராட்சி கிழக்கிலுள்ள நெல்லியான் செம்பியன் பற்றின் அரசகாணியிலுள்ள காடுகள் பெருமளவாக அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஊரிலுள்ள வாசிகள் இங்குள்ள காட்டு மரங்களை வெட்டி தாம் விரும்பியவாறு எல்லை யோட்டு தம்வசமாக்கி வருகின்றனர். இச்செயற்பாடு மிக வேசமாகப் பரவுகிறது. இன்னும் சில மாதங்களில் இக்காட்டு நிலங்கள்பெரும் வெளிகளாகக் காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. இவற்றை அழிப்பவர்கள் அவ்வூரிலே சொந்த வீடு, காணி இருப்பவர்களே ஆவா.

முன்பு சில காலம் பாதுகாப்புத் தேவைகளுக்காக தென்னை, பனை மரங்கள் பெருமளவு அழிக்கப்பட்டன. தற்போது ஏனைய மரங்கள் ஊர்மக்களால் அழிக்கப்படுகின்றன.

காடுகளை அழிக்கும் நடவடிக்கையைத் தடுக்க உதவிஅரசாங்க அதிபர் பணிமனையோ, வேறு அமைப்புக்களோ இதுவரை முன்வரவில்லை.

சமூகத்தில் கேடு விளைவிக்கும் இந்த செயற்பாட்டை நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

**நெல்லியான் [illegible]**

# யாழ். மாநகர சபைப் பகுதியில்
# புல்,பூண்டுகளை அழிக்கத் தனிப் பிரிவு
## நுளம்புத் தொல்லையை ஒழிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள வீதியோரங்களிலும் தனியார் காணிகளிலும் வளர்ந்து வரும் புல் பூண்டுகளை அழிப்பதற்கு விசேட பிரிவு ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

தேவையற்ற புல், பூண்டுகளின் வளர்ச்சியால் நுளம்பு மற்றும் பூச்சிகளின் பெருக்கம் அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடனே இவற்றை அழிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த கால வன் செயல்களினால் இடிந்து கைவிடப்பட்ட நிலையிலுள்ள கட்டடங்கள் மற்றும் பராமரிப்பற்ற நிலையிலிருக்கும் வீட்டு வளவுகள் போன்ற இடங்களில் பெருமளவு புல் பூண்டுகள் காணப்படுகின்றன.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்திலும் எடுக்கப்பட்டது

நகரப்பகுதிகளிலுள்ள புல் பூண்டுகளை அழித்து நகரைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று மாநகரசபை உறுப்பினர்கள் பலர் இக் கூட்டத்தில் வலியுறுத்திப் பேசினார்கள்.

இதற்குப் பதிலளித்த யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் யாழ். மாநகரசபை தொழிலாளர் சேவையை விஸ்தரிப்பதுடன் புல் பூண்டுகளை அழிப்பதற்கு விசேட பிரிவு ஒன்று அமைக்கப்படும் என்றும் மழை காலம் முடிந்தவுடன் இப் பிரிவு செயற்படும் என்றும் தெரிவித்தார்.

(இ-5)

## பாலர் பாடசாலை சேதம்

புத்தூர் கிழக்கு மத்திய சனசமூக நிலையபாலர் பாடசாலை, அங்கு வீசி பமினிசூறாவளியினால் சேதமடைந்து, தொடர்ந்து பெய்துவரும் மழையினால், இயக்க முடியாத நிலையில் உள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் கட்டடம் முற்றாகச் சேதமடைந்திருந்த இப்பாடசாலை அப்பகுதி மக்கள் மீளக்குடியமர்ந்ததை அடுத்து கிடுகினால் வேயப்பட்ட கொட்டகையில் மீண்டும்இயங்க ஆரம்பித்தது.

தற்போது அக்கிடுகுகள்காற்றினால் சேதமுற்று பாடசாலையை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

(இ15)

## மாடு இடித்த சமயம் 'ஐயோ...'என்று கத்தினார்
### மரணவிசாரணையில்தகவல்

ஐயோ ... ஐயோ என்று கத்தின சத்தத்தைக் கேட்டதும் நான் அவ்விடத்துக்குச் சென்ற போது எருது மாடு ஒன்று காலஞ்சென்றவரை இடித்து வீழ்த்தி அவரின் மார்பில் கால்களினால் உளக்கிக் கொண்டு நிற்பதைக் கண்டேன்.

இவ்வாறு அண்மையில் இணுவில் பகுதியில் மாடு இடித்து மரணமான நாகமணி ஜெயராசா (வயது 36) என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த நாகமுத்து ரவிச்சந்திரன் என்பவர் தெரிவித்தார்.

யாழ். நீதிமன்ற பதில் நீதிவானும், மரண விசாரணைஅதிகாரியுமான க.கேசவன் மரண விசாரணையை நடத்தினார்.

இம் மரண விசாரணையின் போது சாட்சி மேலும் கூறியதாவது:-

காலஞ்சென்றவரின் மார்பில் எருதுமாடு உளக்குவதைக் கண்ட நான் உடனே ஒரு தடியை எடுத்து அந்த எருதைக் கலைத்துவிட்டு காயமடைந்திருந்த அவரைத் தூக்கி நிமிர்த்திய போது அவர் தான் மலம் கழிப்பதற்காக சுடலைப் பகுதிக்கு வந்ததாகவும் எருது மாடு தன்னைக் கலைத்து இடித்து வீழ்த்தி கால்களால் உக்கியதாகவும் தன்னை ஆஸ்பத்திரியில்அனுமதிக்குமாறும் கூறினார்.

ஆஸ்பத்திரியில் அனுமதித்த அடுத்த நாள் அவர் மரணமானார்.

இப்படி அவர் தெரிவித்தார்.

ஆறுமுகம் இராசலிங்கம் (வயது 40) என்பவரும் சாட்சியமளித்தார்.

சாட்சியங்களைப் பதிவு செய்த மரண விசாரணை அதிகாரி இறந்தவரின் உடலை மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

(இ-5)

## இந்து மத குருமார் பயிற்சித் திட்டம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் நடத்தும் இந்துமதகுருமார்களுக்கான பயிற்சித் திட்டத்துக்கு இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம் அந்தண சிவாச்சாரியார்கள், அந்தண இளைஞர்கள், 8-14 வயதுக்கு உட்பட்ட அந்தண சிறார்கள ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தகுதியுடையோர் எதிர் வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஒன்றிய கிளைகளில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி பயிற்சிக்குப் பொருத்தமானவர்களை இந்து மதகுருமார் ஒன்றிய வித்துவ சபை தெரிவு செய்யும்.

(இ-8)

## வீதி விபத்துக்களில் 7 பேர் காயமடைந்தனர்

யாழ். குடாநாட்டுப் பகுதியில் நாளுக்குநாள் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற வீதிவிபத்துக்களில் காயமடைந்து ஏழு பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நீர்வேலியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மகாதேவன் புஸ்பகுமார் (வயது 16) அவரது சகோதரியான மகாதேவன் புஸ்பகலா (வயது 14) என்பவரும், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரு சைக்கிள் களுக்கிடையிலான விபத்தில் சப்பல் வீதியைச் சேர்ந்த ரி. கேதீஸ்வரன் (வயது 23) என்பவரும், ஏழாலையில் இடம்பெற்ற வீதிவிபத்தில் வி. அன்னலிங்கம்(வயது 52) என்பவரும், நேற்று முன்தினம் மாலை மூளாயில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் நடராசா பங்கயற்செல்வி (வயது 28) என்பவரும், குப்பிளானில் இடம் பெற்ற சைக்கிள் விபத்தில் மகாலிங்கம் ஜஸ்டினியன் (வயது 14) என்பவரும், கோப்பாய் தெற்கில் இடம் பெற்ற வீதி விபத்தில் பரமசிவம் சரோஜினிதேவி (வயது 30) என்பவருமே காயமடைந்தவர்களாவர்.

(இ-15)

## கியூடெக் 80 ஆயிரம் 'சீற்'றுகள் உற்பத்தி

யாழ்ப்பாணம், ஜன. 6

கியூடெக் நிறுவனம் நடத்தும் சீற் தொழிற்சாலையில் இருந்து 80 ஆயிரம் கூரைத் தகடுகள் உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எஸ். டி. எல். நிறுவனத்துடன் இணைந்து கியூடெக்கினால் உற்பத்தி செய்யப்படும் இந்த கூரைத்தகடுகளுக்கு தற்பொழுது நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்த கூரைத் தகடுகளைப் பெறுவதற்காக அதிகமானோர் விண்ணப்பித்துள்ள போதிலும் அவர்களுடைய தேவையை உடனடியாக பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாக கியூடெக்கைச் சேர்ந்த வணபிதா ஜெயககுமார் தெரிவித்தார்.

(இ-[illegible])

S. L. A. S. பரீட்சை
துணை நூல்கள்

கலாநிதி குணராசாவின்

உ பொது உளச்சார்பு (புதிய பதிப்பு) - 250/-
உ கிரகித்தல் 25/-

(இவ்விரு நூல்களும் புத்தகசாலைகளி கிடைக்கும்)

பல்வேறு துறைசார் அறிஞரின்
பொது அறிவுக்கான கட்டுரைத் தொகுப்பு:
"இன்றைய உலகு"
12 - 01 - 1999 இல் வெளிவருகின்றது
(முன்கூட்டியே பின்வரும் முகவரியில் பதிவு செய்து கொள்க).

கமலம் பதிப்பகம்
(1, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(சி/6018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகள்..

(முதலாம் பக்கத் தொடர்)

பிரிட்டிஷ் எம்.பியிடம் டக்ளஸ் தெரிவித்த விடயங்களின் சாராம்சம் வருமாறு:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியா உட்பட ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின் பங்களிப்பு — சம்பந்தம் — சட்டாயமாகும்.

ஒரு நாட்டின் பங்களிப்புடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடமுடியாது.

இந்நாடுகள் ஏற்பாட்டாளராகவா அல்லது அனுசரணையாளராகவா அல்லது மத்தியஸ்தராகவா பங்குபற்றுவது என்பன பிறகு பார்க்கலாம். ஆனால் பல நாடுகளின் பங்களிப்பு அவசியம் என்பதை மட்டும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பிரிட்டன், கனடா, நோர்வே, ஆஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஈழத்தமிழர்கள் பல நூற்றுக்கணக்கில் இடம்பெயர்ந்து தமது நாடுகளில் தஞ்சம் கோரியிருப்பதால் நெருக்கடிகளை எதிர்நோக்கும் ஏனைய நாடுகள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் சம்பந்தப்படலாம்.

''பல சமையல் காரர்கள் கூப்பைக் கெடுத்தார்கள்'' என்ற மாதிரி ஆகக் கூடுதலான நாடுகளைச் சேர்க்கத் தேவையில்லை. ஒரு சில நாடுகளை மட்டும் சேர்த்து முயற்சியை முன்னெடுப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட இரு தரப்பின் மீதும் கணிசமான அழுத்தத்தைக் கொடுக்க முடியும்; யுத்த நிறுத்தம் ஒன்றை உடனடியாகக் கொண்டு வர முடியும்;

தீர்வு ஒன்றை ஏற்றுக் கொள்வதற்கு இரு தரப்பையும் இணங்க வைப்பதற்கும்—

காணப்படும் தீர்வை ஏற்றுக் கடைப்பிடிக்கும் விதத்தில் இருதரப்பையும் கட்டுப்படுத்தவும்—

பல வெளிநாடுகள் ஒன்றாகச் சம்பந்தப்படுவது உதவும்.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டிய அத்தியாவசிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

தொடர்ந்தும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாத – நெருக்கடியின்விளிம்பு நிலையில் — மக்கள் உள்ளனர்.

அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாகும் அடுத்த ஆண்டு பிறந்ததும் அரசு மற்றும் முக்கிய கட்சிகளின் கவனம் தேர்தலில் திரும்ப இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வாய்ப்பு இல்லாமல் போய் விடும்.

தேர்தல் முடிந்து, புதிய அரசு வந்து அதற்குப் பின்னர் தீர்வு முயற்சி முன்னெடுக்கப்படுவதாயின் அதற்கு மேலும் பல ஆண்டுகள் சென்றுவிடும்.

அதுவரை தாக்குப்பிடித்து பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலையில் மக்கள் இல்லை. எனவேதான் இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்வு காணப்படவேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம் — என்று தாம் பிரிட்டிஷ் எம்.பியிடம் கூறியதாக டக்ளஸ் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு இரண்டு மணி நேரம் நீடித்தது.

## யுவதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

இரவு 1–30 மணிக்கு சீருடை அணிந்தவர்கள் இலக்கத்தகடு இல்லாத வாகனமொன்றில் சென்று விடுதியையும் பெண்களையும் சோதனையிட எத்தனித்துள்ளனர், இவர்களுடன் சீருடையணிந்த பெண் காவலர்கள் எவரும் செல்லவில்லை.

இந்நடவடிக்கை குறித்து நாம் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் பெண்கள் தங்கி இருக்கும் விடுதிகளைச் சோதனையிட விரும்பினால் அந்த விடுதி அமைந்திருக்கும் பகுதி பொலீஸ் நிலைய பொலீஸ் உத்தியோகத்தர்களையும் பெண் பொலீஸாரையும் அங்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் வற்புறுத்துகிறோம்.

இதுவிடயமாக பல தடவைகள், பலகட்சிகள் தங்களுக்குத் தெரிவித்தும் இதுவரை தங்களது அரசு எதுவித கவனமும் செலுத்த வில்லை.

புலிகளை தேடுவது என்ற போர்வையில் தமிழ்ப்பெண்கள் உளவியல் ரீதியாக இம்சிக்கப்படக் கூடாது எனத் தெரிவித்துக் கொள்வதுடன் இரவு நேரங்களில் பெண்களை விடுதிகளில் சோதனையிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்—இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## செஞ். கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 6

இருவார இடைவெளிக்குப் பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் நோயாளர் கப்பல்சேவை மீண்டும் நேற்று நடைபெற்றது.

கொழும்பில் சிகிச்சை பெற்ற ஒரு தொகுதியினர் திருகோணமலையில் இருந்து நேற்று அழைத்து வரப்பட்டனர். இங்கிருந்து கொழும்பில் சிகிச்சை பெறவேண்டிய ஒரு தொகுதியினர் நேற்றே கூட்டிச் செல்லப்பட்டனர்.

நேற்று வந்த கப்பலில் 178 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

(உ-7-15-51-139)

## விடைத்தாள்...

[முதலாம் பக்கத் தொடர்]

பிரதம தேர்வாளர்கள் மற்றும் ஏனையதேர்வாளர்களை இன்று காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு தவறாது சமுகம் தருமாறு யாழ் வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## பேச்சுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

முயற்சி எடுக்க வேண்டும்.

நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டுக்கு நன்மைவிளையும்; விமோசனம் கிட்டும்.

நம்நாட்டுயுத்தத்தின்போது வேறு நாடுகளும் தலையிடுகின்றன— சர்வதேச உதவி இல்லாவிட்டால் யுத்தம் இத்தனைதூரம்சென்றிருக்காது.

பயங்கரவாத அமைப்புகள் தமது காரியாலயங்களைப்பிற நாடுகளில் அமைத்துக்கொள்ளவும் சில வெளிநாடுகள் உதவுகின்றன

சில நாடுகள் அரசாங்கத்துக்குநேரடியாகவும் ஏனைய அமைப்புகளுக்கு மறைமுகமாகவும் உதவி செய்கின்றன; ஆயுதங்களாகக் கூட வழங்குகின்றன.

இலங்கை போன்ற சிறிய நாட்டிற்கு யுத்தம் சரிப்பட்டு வராது.

ஏனைய நாடுகளிலும் யுத்தம் நடக்கின்றது. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தமட்டில் அதன் பாதிப்பு அளவிட முடியாதது.

— என்று தெரிவித்தார்.

பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கான வற்புறுத்தல் சிங்கள, பௌத்த தலைமையிடமிருந்து இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிவருவது முக்கிய சமிக்ஞை என சில அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (உ-10)


## கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலியைச் சேர்ந்த

**கந்தையா நாகலிங்கம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், இவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
**சதாசிவம் சின்னையா**

சின்னையா கம்மாலை,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி/6027)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஸ்தாபகர்

**திரு. அத்தியார் அருணாசலம்**

அவர்களின் ஏக புதல்வனும்
எமது பாடசாலை முன்னாள் ஆசிரியரும்
எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை

**திருமதி சி. பாலசுப்பிரமணியம்**

அவர்களின் அன்புக் கணவருமான

**அ. அ. பாலசுப்பிரமணியம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையஎல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்**

யா/அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி.

(61959)

## A/L 2001
## வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்: 08-01-99
வெள்ளி பி.ப. 4-00மணி

**யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை**

Acc. — Mr. நித்தி
Eco. — Mr. ஜெயக்குமார்
Com. — உங்கள் ஆசிரியர்
G.A.T — Mr. தவசேகர்

அனுமதிக்கு முந்துங்கள்.

**நாதன் மற்ஸ் அக்கடமி**
சண்டிலிப்பாய்.

(61964)


## தேங்காய் வாங்குவதற்கு சென்றவர் திரும்பவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 6

நல்லூரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 1 ஆம் திகதியிலிருந்து காணாமற் போய் விட்டதாக அவரது மனைவியினால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சின்னத்தம்பி தவராசா (வயது 29 — மூத்த விநாயகர் வீதி, நல்லூர்) என்பவரே காணாமற் போனவராவார்.

சாவகச்சேரிச் சந்தைக்கு தேங்காய் வாங்குவதற்காகச் சென்ற இவர் கடந்த 4 நாள்களாக வீடு திரும்பவில்லை என்று அவரது மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (இ-5)

## முற்றவெளிப் பகுதியில் தொடர்ந்து சிரமதானம்

அரியாலை, ஜன. 6

மழைக்கு மத்தியிலும் முற்றவெளிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை சிரமதானப்பணிகள் இடம்பெற்றன.

புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் இணைந்து நேற்று யாழ். மாநகர சிற்றூழியர்களும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வின்போது இடம்பெற்ற அசம்பாவிதங்களில் உயிரிழந்த பத்துப் பேரின் நினைவாக முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியை அண்டிய பகுதியில் காணப்பட்ட அடர்ந்த பற்றைகள் புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

(உ-17)

## புதிய கல்வித்திட்ட கால் கோள் விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன. 6

புதிய கல்வித் திட்டத்தின் பிரகாரம் முதலாம் தரத்துக்குக் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் கால்கோள் வைபவம் யாழ். மத்தியகல்லூரியில் நாளை நடைபெறவிருக்கிறது.

கல்லூரி அதிபர் க. இராசதுரை தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

முதலாம் தர மாணவர்களை கல்லூரியின் 2 ஆம் தர மாணவர்கள் சிற்றுண்டி, இனிப்பு வழங்கி வரவேற்பதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந்த வைபவத்தில் கல்லூரி அபிவிருத்திச் சபையினர் புதிய மாணவர்களுக்கு கல்விசார் உபகரணங்களையும்; யாழ். வலயப் பணிப்பாளர் பாடநூல்களையும் வழங்குவர்.

கல்லூரி ஆரம்பப் பிரிவுத் தலைவர் த. தியாகராசா கற்றல் நடவடிக்கையை ஆரம்பித்து வைப்பார். (உ-3)

## இளைஞர்கள் விடுவிப்பு

புன்னாலைக்கட்டுவன், ஜன. 6

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் இருவாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

பிரஸ்தாப இளைஞர்களின் பெற்றோர், அப்பகுதி கிராம சேவையாளர் ஆகியோர் முன்னிலையில் வைத்துப் படையினர் அவர்களை விடுவித்தனர். (உ-133)

## திருமலை...

காங்கேசன்துறையில் பொருள்களை இறக்கிய பின்னர் அங்கிருந்து ஒரு தொகுதி பயணிகளை திருமலைக்கு கூட்டிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்—

பின்னர் திருமலையில் இருந்து வ.பி.போ. சபைக்குரிய 24 பஸ்களை ஏற்றிக் கொண்டு அக்கப்பல் காங்கேசன்துறை செல்லும் என்றும் —அவர் தெரிவித்தார்.

திருமலையில் தரித்துள்ள பயணிகளை யாழ்ப்பாணம் கூட்டிச் செல்வது தொடர்பாக இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## ஜப்பானிய...

(முதலாம் பக்கத் தொடர்)

இருநாடுகளுக்கும் இடையேயான பொருளாதார, கலாசார மற்றும் விடயங்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இக்குழு பேச்சு நடத்தும்.

(உ-க-3)

## உதவிப்பண கொடுப்பனவு

நெல்லியடி, ஜன. 6

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசத்தில் பொதுமக்கள் உதவிப்பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவு இன்று முதல் உபதபாலகங்கள் ஊடாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-109)

## கதவு எரிப்பு

நெல்லியடி, ஜன. 6

புலோலி ப.நோ.கூ. சங்கத்தின் மந்திகை மடத்தடியில் உள்ள கிளையின் கதவு இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் இரவு டயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளது என்று கிளை முகாமையாளர் தலைமை அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

(உ-109)

## கிழக்கிலும்...

[முதலாம் பக்கத் தொடர்]

குளம் ஆகியன நிரம்பி வழிகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் தொடரும் அடைமழையால் பத்தாயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நகரின் தாழ்ந்த பகுதிகளிலும் மூதூர், கிண்ணியா, சேருவில பகுதிகளிலும் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

திருகோணமலையிலிருந்து மூதூருக்குச் செல்லும் தரைப்பாதைக்கு மேலால் ஆறடி உயரத்துக்கு வெள்ளம் பாய்வதால், போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

மூதூரில் ரத்தல் குளம் பெருக்கெடுத்ததால், நேற்று மாலை அங்கு நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்,

பூந்தோட்டம் பாடசாலையில் 46 குடும்பங்களும். முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் 35 குடும்பங்களும் சிவபுரம் வித்தியாலயத்தில் 25 குடும்பங்களும் தஞ்சம் அடைந்துள்ளன.

இராணுவக் கட்டுப்பாடு அற்ற வன்னியில் ஓய்ந்திருந்த மழை நேற்றுக் காலை மீண்டும் ஆரம்பமானது என்று வவுனியாவுக்குக் கிடைக்கும் தகவல் தெரிவிக்கிறது.

(உ-3-6-21-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆவது புதிய பிரிவு
## SPOKEN ENGLISH
With
## GRAMMAR

LECTURES BY: **MR. M. A. HARI**

**ஆரம்பம்:** 07 - 01 - 1999
**வியாழன் மாலை 3 மணி**

THURSDAY } 3.00 P.M — 4.00 P.M.
TUESDAY }

★ அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.

**DIRECTOR**
**HARY'S INSTITUTE**
KONDAVIL EAST,
KONDAVIL.

(61947)

எமது புதிய வீடியோ
CD வெளியீடு!

**கார்த்திக் - கௌசல்யா**

நடிக்கும்

## பூவேலி
## வீடியோ
## விமல்

யாழ்ப்பாணம்.
(சி/6026)

## கோப்பாய்ப் பகுதியில்
# பாடசாலைக் கிணற்றில் பெண்ணின் சடலம்

வலி. கிழக்கு. ஜன. 6

கோப்பாய் மகா வித்தியாலய கிணற்றுக்குள் இருந்து பெண் ஒருவரின் சடலம் கோப்பாய் பொலீஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கச் சென்ற வித்தியாலய மாணவர்கள் கிணற்றுக்குள் சடலம் இருப்பதைக்கண்டு தகவல் கொடுத்ததன் பேரில் இச்சடலம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருபாலையைச் சேர்ந்த இ. நாகரத்தினம் (50 வயது) என்ற பெண்ணின் சடலமே அது என இனங்காணப்பட்டதுடன், சடலம் மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

''தன் மரணத்துக்குத் தானே காரணம்'' என்று அப்பெண்ணால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-180)

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

**Exemption from Open University Programs For Completing Our Diploma in Computer.**

**Learn Software & Hardware Technology for today**

1) DIPLOMA IN COMPUTER PROGRAMMING & DATA PROCESSING
JAFFNA CENTRE
( Including MS Excel & MS Word )
( ONE YEAR — FULL TIME )
ENTRY QUALIFICATIONS:
6 Passes in G. C. E. [ O/L ]
Including Credit in Maths & pass in English.

2) CERTIFICATE COURSES [ Computer software ] -
JAFFNA CENTRE
- Business Applications [ Includes MS Excel, Word & Access ].
- Pascal.
- Object Oriented Programming [Visual Basic].

( ALL 3 — 4 MONTHS DURATION )

3) DIPLOMA IN ELECTRONICS&TELECOMMUNICATION-ENGINEERING.
JAFFNA CENTRE
( THREE YEARS - FULL TIME )
ENTRY QUALIFICATIONS:
6 Passes in G. C. E. [ O/L ].
Including Credit in Maths & Pass in English.

4. CERTIFICATE COURSE IN DIGITAL COMPUTER - FUNDERMENTALS.
JAFFNA CENTRE
[ Basic Computer Hardware ]
( DURATION: 6 MONTHS ( EVENING )
MINIMUM ENTRY QUALIFICATION:
6 Passes in G. C. E. [ O/L].
Including Credit in Maths & Pass in English.

FACILITIES:
1. Library - நூலகம்.
2. Hostel - விடுதி வசதிகள்.
3. Sports - விளையாட்டு வசதிகள்.

எல்லாப் பாடங்களுக்கும் தமிழ்மொழியில் விளக்கம் கொடுக்கப்படும்.

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
**VADDUKODDAI / JAFFNA CENTRE,**
**( Opposite O. P. D., Jaffna Hospital).**
**464, Hospital Road, Jaffna.**

5) CRAFT COURSES
VADDUKODDAI
தமிழ்மொழி மூலம் கிழமை நாள்களில் ஒரு வருடமுழு நேர வகுப்புக்கள் வட்டுக்கோட்டை.

a) Mechanical Craftsman Practice
லேத், வெல்டிங், பிற்றிங் பயிற்சி
(காலம் - 1 வருடம்)

b) Electrical Wiring & Instalation Practice.
மின் இணைப்பும், நிர்மாணமும்
(காலம் - 1 வருடம்)

c) Motor Vehicle Technology ( Petol & Diesel)
மோட்டார் வாகன தொழில் நுட்பம், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும் பழக்கப்படும்.
(காலம் - 1 வருடம்)

d) Radio & T.V. Servicing
றேடியோ & ரீவி பழுது பார்த்தல் - செய்முறையுடன்
(காலம் - 1 வருடம்)

G. C. E. [O/L] கல்வி கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

e) Certificate Course in Foundary Practice
(வார்ப்புப்பயிற்சி)
VADDUKODDAI

ENTRY QUALIFICATIONS:
6 Passes in G.C.E. [ O/L ].
Including Credit in Maths & Pass in English.

This Course will be re-started for minimum entrollment of 5 Students.
GET APPLICATIONS AT VADDUKODDAI & JAFFNA CENTRE.

INTERVIEW TO BE HELD IN VADDUKODDAI & OUR JAFFNA CENTRE
**ON WED. 27th JAN. '99**
AT 10.30 a.m. ( Sri Lankan Time. )

**Classes to Commence From the First Week Of February 1999.**

நேர்முகப் பரீட்சை 27 . 01 . 1999 அன்று 10, 30 மணிக்கு [ புதிய நேரப்படி ] வட்டுக்கோட்டையிலும், யாழ்ப்பாணக் கிளையிலும் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து தபால் மூலம் அனுப்பலாம்; அல்லது நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும் போது சமர்ப்பிக்கலாம். பயிற்சி பற்றிய விளக்கம் தேவைப்படுமாயின் தை 11 தொடக்கம் கிழமை நாள்களில் 9.30a.m- 2.40p.m வரை நேரில் சந்திக்கலாம்.

பாடநெறிகள் மாசி மாத முதல் வாரத்திலிருந்து ஆரம்பிக்கும்.

**DIRECTOR**

(C/5968)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06 - 01 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org